# ஈழத்துத் தமிழ் மொழிபெயர்ப்புப் பரப்பில் திக்வெல்லை கமாலின் செல்வாக்கு:ஓர் இனங்காணல் முயற்சி

அஷ்ர.்.ப், அ.ப.மு.

**அறிமுகம்:**

திக்வெல்லைக் கமால், தென்னிலங்கைத் தமிழுலகின் தவப்புதல்வர். ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எனக் கல்விசார் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தாலும் வெளியுலகில் மட்டுமல்லாது தாம் சார்ந்த பிராந்தியத்திலும் அதிகமாக அறியப்படாதவர். இவரது இலக்கியப் பணிகள் பல்வேறு பரிமாணங்களில் மிளிர்ந்ததால் ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென்றொரு தடத்தைப் பதித்தவர். பல்லின, பன்மொழிச் சூழல்களில் பணியாற்றியமை அவரது தனித்துவத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதை அவதானிக்கலாம். ஈழத்துத் தமிழ் மொழிபெயர்ப்புப் பரப்பில் திக்வெல்லை கமாலின் செல்வாக்கினை இனங்காண்பது இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகவும் திக்வெல்லைக் கமாலையும் அவரது இலக்கியப் பணிகளையும் மக்கள்மயப்படுத்துவது இக்கட்டுரையின் துணைநோக்கமாகவும் அமைகிறது.

அடக்கம் அவரது உயிர். எதையும் அமைதியாகவும் தெளிவாகவும் பேசுபவர். பேச்சிலும் எழுத்திலும் நிதானமானவர். பெயரையும் புகழையும் எண்ணாதவர். தற்பெருமை பேசாத எளிமையாளர். சமூகத்தையே முதன்மையாகக் கொண்டு ஏறத்தாள நாற்பது வருடங்களாக எழுதி வரும் கமாலுக்கு, முஸ்லிம் கலாசார அமைச்சு 'இலக்கிய வேந்தன்' எனும் பட்டத்தையும் இலங்கை கலாசார அமைச்சு 'கலாபூஷணம்' பட்டத்தையும் வழங்கியுள்ளன.

**'எலிக்கூடு**' எனும் புதுக்கவிதையினூடாக அறுபதுகளின் இறுதிப் பகுதியில் இலக்கிய உலகிற்குப் பிரவேசித்த கமால்,'வானம்பாடி','சிரித்திரன்' முதலிய சஞ்சிகைகளிலும் புதுக்கவிதைகளை எழுதி வந்தார். இவரது முதலாவது நூற்தொகுப்பு, கவிதைகளின் தொகுப்பாக 'எலிக்கூடு' எனும் தலைப்பில் 1973இல் வெளிவந்தது. இதனை ஈழத்தில் வெளிவந்த 'முதல் தமிழ்ப் புதுக்கவிதைத் தொகுப்பு' என சில விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். கமாலுடைய ஆரம்பகால இலக்கியப் படைப்புக்கள் 'தாமரை','செம்மொழி','செம்மீன்','கணையாளி','வானம்பாடி','ஏன்','எழுச்சி','ராதா','இன்சான்' முதலிய சஞ்சிகைகளிலும் 'தினகரன்','வீரகேசரி','தினபதி' போன்ற பத்திரிகைகளிலும் வெளிவந்தன. கவிஞர் ஏ. இக்பால், இரா. சந்திரசேகரன், எம்.எச்.எம். ஷம்ஸ், ஹம்ஸா முஹம்மது முதலானோரின் உறவோடு, 1970களின் ஆரம்பத்தில் மல்லிகை சஞ்சிகையுடனான அறிமுகமும் நிகழ்கிறது.

இலக்கியத்துறையில் குழுநிலை முயற்சி என்றவகையில் ,'திக்குவல்லை எழுத்தாளர் சங்கம்','இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்','தமிழ் – சிங்கள எழுத்தாளர் சங்கம்' முதலான அமைப்புக்களில் செயற்பாட்டாளராக இயங்கி வருகின்றார்.

திக்வெல்லை கமால் கவிதை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், வானொலி நாடகம், பத்தி எழுத்துக்கள், சரிதை, மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் தனது பங்களிப்பை விரிவுபடுத்தியிருக்கிறார். ஈழத்து இலக்கிய உலகில் ஒரு பல்துறைசார் படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டி, தனது இலக்கிய ஆளுமையையும் வளப்படுத்திக் கொண்டுள்ளார்.

இவரது கவிதை முயற்சிகளை இனங்காட்டும் தொகுப்புக்களாக எலிக்கூடு (புதுக்கவிதை- 1973), பூக்களின் சோகம் (2009) ஆகிய இரு தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. 'எலிக்கூடு' கருத்துணர்வுக்கு அவசியமான சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட, யாப்புக்குள் அகப்படாத புதுக் கவிதைகளைக் கொண்டுள்ளன. இக் கவிதைகள் சமூகத்தில் காணப்படும் வர்க்க பேதங்களையும் அதனால் விளையும் சிக்கல்களையும் கருப்பொருளாகக் கொண்டவை. பூக்களின் சோகம் எனும் தொகுப்பில் 'சீர்கேடு','ஏற்றத்தாழ்வு','யுத்தம்','சமாதானம்' போன்ற பல்வேறு தலைப்புக்களில் 61 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பு 2009ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய கவிதையாக்கப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

திக்வல்லை கமால் முந்நூறுக்கும் மேற்பட்டசிறுகதைகளை எழுதியுள்ளார். அவரது சிறுகதைகளைத் தாங்கிய தொகுப்புக்களாக 'கோடையும் வரம்புகளை உடைக்கும்'(1984),'குருட்டு வெளிச்சம்'(1993),'விடுதலை' (1996),'விடை பிழைத்த கணக்கு'(1996),'புதிய பாதை' (1997),'வரண்டுபோன மேகங்கள்' (1999),'நோன்புக் கஞ்சி' (2007),'முட்டைக்கோப்பி'(2010) ஆகியன வெளிவந்துள்ளன. இவற்றுள் 'நோன்புக் கஞ்சி' சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மனித நேயத்தோடு பிரச்சினைகளை அணுகி, நடைமுறைச் சாத்தியமான முற்போக்குக் கருத்துக்களை உள்ளடக்கி மண்வாசனை நிறைந்த படைப்புக்களைத் தந்தவர் கமால். பொதுவாக இவரது கதைகள் வர்க்கபேதத்தின் தீய விளைவுகளையே பேசுகின்றன. குறிப்பாக,தென்னிலங்கை முஸ்லிம் சமூக வாழ்வில் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள், அதன் யதார்த்த நிலை ஆகியன பேசப்பட்டுள்ளன.

கமாலின் படைப்பாக்க முயற்சிகளுள் குறிப்பிடத்தக்கது அவரது நாவலிலக்கிய முயற்சியாகும். 'ஒளி பரவுகிறது' (1995),'நச்சு மரமும் நறு மலர்களும்' (1998),'பாதை தெரியாத பயணம்' (2000),'உதயக் கதிர்கள்' (2006),'ஊருக்க நாலுபேர்' (2007),'தெளிவு' (2009) ஆகிய ஆறு நாவல்கள் அவரால் எழுதப்பட்டுள்ளன. 'உதயகதிர்கள்' என்ற நாவல் எஸ்.ஏ.ஸி.எம். கராமத்தினால் சிங்களமொழிக்கு 'ராழியா' எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

''சமுதாய முரண்பாடுகள் பிரச்சினைகள் என்பவற்றையும் அவற்றால் மக்களின் வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்களையும் கொண்ட சமுதாய நிலைமையைப் பிரதிபலிப்பதே யதார்த்தமாகும். ஆனால், சமுதாயப் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கி, அவற்றுக்கான காரணகாரிய தொடர்புகளை விளக்கி அவற்றைத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும் அவற்றுக்கான வழி வகைகளையும் விபரித்துக் காட்டுவதே யதார்த்தப் பண்பாகும்.'' (கைலாசபதி, க., இலக்கியச் சிந்தனைகள், 1983, பக். 139 – 141) மேற்குறிப்பிட்ட யதார்த்தம் தொடர்பான பேராசிரியர் க. கைலாசபதியின் கூற்று கமாலின் நாவல்களில் நிரூபணமாகியுள்ளது.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் எனும் மாக்சிய நோக்கில் சமூகத்தில் நிலவும் வர்க்க முரண்பாடுகளுக்கு எதிராக இலக்கியம் மூலம் குரல் கொடுத்தவர். தொழிலாளர்களின் உரிமைகளை மறுத்த நெசவாலை நிர்வாகத்துக்கு எதிராகத் திரண்டெழுந்து, போராட்டம் நடாத்தி, இளம் பெண் தொழிலாளர்கள்தமதுஉரிமைகளைவென்றெடுக்கும் நடைமுறையைக் கூறும் விதம், கிராமியப் பின்னணியில் சமூகத்தில் காணும் வர்க்க முரண்பாடுகளை வெளிப்படையாகப் பேசும் தன்மை, வழிகாட்டல் கிடைக்கப் பெறாமையால் தடுமாறும் மாணவர்களைப் பற்றிப் பேசுகின்றமை, பண்பாடுகள், விழுமியங்கள் என்று பெண்ணின் உன்னதங்களையும், உணர்வுகளையும் காவுகொள்ளும் கொடுமைகளுக்கு எதிராகப் போராடத் தூண்டும் விதம், சமூக சேவையில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பேசுதல், பாமர மக்களின் பக்தியை முன்னிறுத்தி, தில்லுமுல்லுகளைச் சவாலாக ஏற்றுச் செய்துகாட்டும் வாலிப எழுச்சியை, கிராமப் பின்னணியில் எடுத்துச் சொல்லுகின்ற முறைமை ஆகியன மண்வாசனையோடும் யதார்த்தத்தோடும்அவரது நாவல்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

கமாலின் இலக்கிய முயற்சிகளுள் அவரது சிறுவர் இலக்கிய முயற்சிகளும் குறிப்பிடத்தக்கன. சமூகத்தில் மூலை முடுக்குகளில் நடக்கும் பிரச்சினைகளையும் சம்பவங்களையும் தன் படைப்புக்களுக்கான கருப்பொருளாக்கி அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் கமால், சமூக வளர்ச்சியில் சிறுவர்களினது ஆளுமை விருத்தியும் முக்கியமானது எனக் கருதுகிறார்.

பிறந்த நாள் (2003), உதயபுரம் (2005), குளக்கரை வீரன் (2007) ஆகியன அவரது சிறுவர் கதைத் தொகுப்புகளாகும். 'உதயபுரம்' எனும் கதையை அடாலே பியதிஸ்ஸ, மொகமட் ராசூக் ஆகியோர் இணைந்து 'உதயபுரய' எனும் தலைப்பில் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளனர். நல் விழுமியங்களையும் பண்புகளையும் சிறார்களின் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் அவர்தம் வயதுக்கேற்பவும் அனுபவங்களுக்கேற்பவும் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

அடுத்த அவரது இலக்கிய முயற்சிகளுள் ஒலி நாடகங்களும் குறிப்பிடத்தக்கவை.புகையில் கருகிய பூ(2001), நிராசை (2005) ஆகியன அவரது

ஒலிநாடகங்களின் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. சமூகப் பிரச்சினைகளையும் அரசியல், வரலாறு சார்ந்த சம்பவங்களையும் நிகழ்வுகளையும் கருப்பொருளாகக் கொண்டு இவ்வானொலி நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன.

மேலும், மல்லிகை ஜீவா மனப்பதிவுகள் (2004) என்ற சரிதையும் அவரது விமர்சனக் கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் ஆகியனவும் குறிப்பிடத்தக்கன.

**மொழிபெயர்ப்பு முயற்சிகள்:**

கமாலின் பல்துறைசார் இலக்கியப் பணிகளுக்கு ஈடாகக் குறிப்பிடத்தக்கது அவரது மொழிபெயர்ப்பு முயற்சிகள். சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசத்தில் வாழ்ந்த அவரது சமூகச் சூழலும் இருமொழிப் பரிச்சயமும் பிற்காலத்தில் அவரையொரு மொழிபெயர்ப்பாளராக்கின.

சிறந்த, ஆக்கபூர்வமான படைப்புக்களை மொழிபெயர்த்துத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துக் கொண்டிருக்கும் ஈழத்து மொழிபெயர்ப்பாளர்களின் வரிசையில் திக்வெல்லைக் கமால் முக்கியமானவராவார். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என இவரது மொழிபெயர்ப்புப் பணிகள் பன்முகப்பட்டவை. மார்டின் விக்ரமசிங்கவின் ‘கம்பெரலிய’ எனும் நாவலை 1964ஆம் ஆண்டு எம்.எம். உவைஸ் ‘கிராமப்பிறழ்வு’ எனும் தலைப்பில் மொழிபெயர்த்ததிலிருந்து ஈழத்தில் சிங்கள இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சி தொடங்குகின்றது. அதனைத் தொடர்ந்து ‘விராகய’, ‘மடோல் தூவ’,‘பெத்சம’,‘சரித துனக்’ எனத் தொடங்கி இன்றுவரை சுமார் முப்பத்தி ஐந்து சிங்கள நாவல்கள் தமிழில் அறிமுகமாகியுள்ளன. அவற்றுள் ஆறு மொழிபெயர்ப்புகள் கமாலினுடையவை. அவையாவன:

1. தெனகம சிறிவர்த்தனவின் ‘குருபண்டுறு’(ගුරුපඬුරු) எனும் இளைஞர் நாவல்‘குருதட்சணை’(2008) எனும் பெயரில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
2. விமலதாஸ முதாகேயின் ‘தயாசேனலாகே ஜயக்ரஹனய’ (දයාසේනලාගේ ජයග්‍රහනය) எனும் இளைஞர் நாவல் ‘வெற்றியின் பங்காளிகள்’ (2009) எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
3. டெனிஸன் பெரேராவின் ‘ஆகாஸே மாளிகாவ’ (**ආකාසේ මාලිගාව**) எனும் இளைஞர் நாவல் ‘மலையுச்சிமாளிகை’ (2010)எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
4. குணசோம குணசேகரவின் ‘வனகத வீரயோ’ (**වනගත වීරයෝ**) எனும் இளைஞர்நாவல்‘காட்டுப்புறவீரர்கள்’(2011)எனும்பெயரில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
5. உபாலி லீலாரத்னவின் ‘பினிவன்தலாவ’ (**පිනිවන්තලාව**) எனும் சிங்கள நாவல் ‘விடைபெற்ற வசந்தம்’(2010) எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
6. சிட்னிமாகஸ் டயஸின் ‘முலதீவ் சீயா’ (**මුලතිව් සීයා**) எனும் நாவல் ’முல்லைத்தீவுத் தாத்தா’ (2011)எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் நாவல்களைப் பொறுத்தவரையில், இளைஞர் சமூகத்தின் குணநலன்கள், மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நோக்கில் நாவல்கள் எழுதப்படுவது அரிது. அக்குறையைப் போக்கும் வகையில், முக்கியமாகத் தமிழ் பேசும் இளைஞர் சமூகம் பயன் பெறத்தக்க வகையில் இந்நாவல் மொழிபெயர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. சிங்களக் கிராமங்களில் துன்பப்படும் சிறுவர்களின் வாழ்க்கை முறைமை, பழக்கவழக்கங்களைத் தமிழ் பேசும் சமூகத்திற்கும் எடுத்துக்காட்டி, சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் உண்டு என்பதை இந்நாவல் மொழிபெயர்ப்புகள் உணர்த்த முயல்கின்றன. மனிதன் – மனிதாபிமானம் எனும் நோக்கில் அனைவரும் ஒன்றே என்பதை மறைவாக எடுத்துக்கூறிப் புரிந்துணர்வைஏற்படுத்தும்உள்நோக்கிலும்இந்நாவல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம்.

தமிழில் வெளிவரும் சிங்கள மொழிபெயர்ப்பு இலக்கியங்களுள், நாவல்களைவிட சிறுகதைகளே அதிகம் மொழிபெயர்க்கப்படுகின்றன. 1979இல் **‘சேதுபந்தனம்**’ எனும் பெயரில் டி. கனகரத்தினம் மொழிபெயர்த்த சிறுகதைத் தொகுப்புடன் ஆரம்பிக்கும் சிங்களச் சிறுகதை மொழிபெயர்ப்புக்குப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளுமே களம் அமைத்துக் கொடுக்கின்றன. இதுவரை சுமார் பதினைந்து சிங்களச் சிறுகதைத் தொகுப்புக்கள் தமிழில் வெளிவந்துள்ளன. அதிகமான சிறுகதைகள் தொகுக்கப்படாமல் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்து, உதிரிகளாக இருக்கின்றன. இவற்றுள்

திக்வெல்லை கமாலின் சிறுகதை மொழிபெயர்ப்பு முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை. கமாலின் சிறுகதை மொழிபெயர்ப்புத் தொகுப்புகள் பின்வருமாறு:

1. சிட்னி மாகஸ் டயஸின் 'பவசரண' (**භවසරණ**) எனும் பத்துச் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு 'தொடரும் உறவுகள்' (2009) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
2. கமல் பெரேராவின் 'எருனு தொர' (**ඇරුණු දොර**) எனும் சிறுகதைத் தொகுப்பு 'திறந்த கதவு' (2009) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
3. சிங்களச் சிறுகதைத் தொகுப்பு –I,'கலங்கரை விளக்க அடிவாரமும் ஏனைய கதைகளும்' (2008) எனும் தலைப்பில் வெளிவந்த மொழிபெயர்ப்புச்சிறுகதைகளின் தொகுப்பு, எஸ்.ஏ.சி.எம். கராமத், எம்.எச்.எம். யாக்கூத் ஆகியோருடன் இணைந்த கமாலின் கூட்டு முயற்சியாகும்.
4. சிங்களச் சிறுகதைத் தொகுப்பு –II 'ராஜினி வந்து சென்றாள்' (2008) எனும் தலைப்பில் வெளிவந்த மொழிபெயர்ப்புச்சிறுகதைகளின் தொகுப்பு, எஸ்.ஏ.சி.எம். கராமத், எம்.எச்.எம். யாக்கூத் ஆகியோருடன் இணைந்த கமாலின் கூட்டு முயற்சியாகும். இம்மொழிபெயர்ப்பு சிங்களச் சிறுகதைத் தொகுப்பானது, புதிய தலைமுறையினரின் இருபது சிறுகதைகளைக் கொண்டது. இதில் திக்குவல்லை கமாலின் பன்னிரெண்டு மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

மனித வாழ்வையும் அவர்களுடைய உறவுகளையும் கருணையுடன் நோக்கும் இச்சிறுகதைகள், தமிழ் வாசகர்களுக்குப் புதிய செய்திகளையும் அனுபவங்களையும் வழங்கும் எனும் நம்பிக்கையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள தொகுதிகளில் மொழிபெயர்ப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் சமூகம், அரசியல், பண்பாடு, வர்க்க முரண்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

கமாலின் மொழிபெயர்ப்பு முயற்சிகளுள் அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கவை அவரது சிறுவர் இலக்கிய மொழிபெயர்ப்புகளாகும்.சமூகப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்டு சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினருக்காகவும் இலக்கியம் படைத்துவரும்கமால், சிறுவர்களுக்கான படைப்புக்களைத் தருவதிலும் மொழிபெயர்ப்பதிலும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றார். இதுவரை திக்வெல்லை கமாலின் இரண்டு சிறுவர் இலக்கிய மொழிபெயர்ப்புப் படைப்புக்கள் தமிழ் வாசகர்களுக்குக் கிடைத்துள்ளன. அவையாவன:

1. மெல்டா அதிகாரத்தின் 'விகிளுகார வந்துரு பெடியா' (**විහිළුකාර වඳුරු පැටියා**) எனும் சிறுவர் இலக்கியம் 'குறும்புக்காரக் குரங்குக்குட்டி' (2009) எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
2. சிட்னி மாகஸ் மெல்டா இன் 'அம்மா எனதுரு' (**අම්මා එනතුරු**) எனும் சிங்களச் சிறுவர் இலக்கியம் 'அம்மா வரும்வரை' (2011) என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கமாலின் பிற மொழிபெயர்ப்பு முயற்சிகளையும் இங்கு குறிப்பிடல் பொருந்தும் 'ஜனசங்சதய' எனும் பெயரில் சிங்களத்தில் இருந்த வெவ்வேறு சம்பவங்களின் தொகுப்பு,'அமைதியின் குரல்'– (2010) என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இலங்கையில், காவல்துறை, கல்வித்துறை, சட்டத்துறை, சுகாதாரத் துறைகளில் நடந்த பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்களின் தொகுப்பாக இது உள்ளது.

சாதி, இன, மத வேறுபாடுகளைக் காட்டி முரண்பட்டுப் பிரிந்து போகும் பல்லின சமூகங்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த இலக்கிய பரிவர்த்தனை மிக அவசியமானது என உணரப்பட்டு வருகின்றது. அவ்வழி தாமும் ஒரு மொழிபெயர்ப்பாளனாக நின்று பணியாற்றிட வேண்டும் என்ற அவாவோடு, வாய்ப்புகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறார், கமால்.

**திக்வெல்லை கமாலின் மொழிபெயர்ப்புக்கள்: மதிப்பீடு**

தமிழில் மொழிபெயர்ப்பதற்கான சிங்கள இலக்கியங்கள் பல அடிப்படைகளில் தெரிவு செய்யப்படுகின்றன. ஆனால் தெரிவுசெய்யப்படும் நோக்கத்தை மொழிபெயர்ப்புகள் நிறைவு செய்கின்றனவா? என்பதும் அவை உரிய தரத்தையுடையனவா? என்பதும் ஆய்வுக்குரியவை. சிறந்த, தரமான சில இலக்கியப் படைப்புக்கள் கூட மொழிபெயர்ப்பு வழி அவற்றின் தரத்தை இழந்துள்ளமை, சிங்கள இலக்கியங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு

வரலாற்றை நோக்கும்போது தெளிவாகத் தெரிகின்றது. எம்.எம்.எம். உவைஸ் 'கிராமப் பிறழ்வு' (1964) எனும் பெயரில் மொழிபெயர்த்த மார்டின் விக்கிரமசிங்ஹவின் 'கம்பெரலிய' (**ගම්පෙරළිය**), சுந்தரம் சௌமியன் 'பற்றற்ற வாழ்க்கை' (1992) எனும் பெயரில் மொழிபெயர்த்த மார்டின் விக்கிரமசிங்ஹவின் 'விராகய' (**විරාගය**), மடுளுகிரிய விஜேரத்ன 'ஏர்விழா'(2006) எனும் பெயரில் மொழிபெயர்த்த சோமரத்ன பாலசூரியவின் 'வப்மகுல' (**වප්මගුල**) ஆகிய நாவல்கள் அதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பெரும்பாலான சிங்கள மொழிப் படைப்புக்கள் நேர்மொழிபெயர்ப்பாகவே உள்ளன. மொழிபெயர்ப்பாளன் இலக்குமொழிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட மூலமொழிக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை அம்மொழிபெயர்ப்புக்கள் பிரதிபலிக்கின்றன. மூலமொழி படைப்பாளனுக்கும் மூலமொழி சார்ந்த வாக்கிய அமைப்பு, நடை அம்சங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தமையால் இலக்குமொழியில் அவை அப்படியே வந்து பொருள் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் காணலாம். ஆற்றல் சார்ந்த நிகரன்களைப் பயன்படுத்தாமை, மூலமொழி வாக்கியவியல், நடையியல் அம்சங்களையே இலக்குமொழிக்கும் கொண்டுவர முயற்சித்தல், பேச்சுவழக்குச் சொற்களைக் கையாளுதல் போன்றன மொழிபெயர்ப்புகளின் தரத்தைக் குறைவடையச் செய்துள்ளதைக் காணலாம்.

பொதுவாக, தமிழ் மட்டுமே தெரிந்த வாசகர்களுக்கு உலக இலக்கியம் பற்றிய அறிவைக் கொடுக்க வேண்டும் எனும் நோக்கிலேயே மொழிபெயர்ப்புத் தேர்வுகள் தமிழில் மேற்கொள்ளப்படுகின்றன. ஈழத்துச் சூழலில் மொழிபெயர்ப்புக்காகத் தெரிவு செய்யப்படும் சிங்கள மொழிப் படைப்புக்களைப் பொறுத்தவரையில், எழுத்தாளனுடைய பிரபலத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைவிட படைப்பின் முக்கியத்துவம், சமகாலத்துத் தேவை, மொழிபெயர்ப்புக்குப் பின் இலக்குமொழி வாசகர்கள் மத்தியில் அது ஏற்படுத்தப்போகும் தாக்கம் முதலானவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதுவரை சிங்களத்தில் இருந்து தமிழ் மொழிபெயர்ப்புக்காகத் தெரிவு செய்யப்பட்ட படைப்புக்கள் அனைத்தும் இவ்வகையில் தேர்வு செய்யப்பட்டவையா என்பது கேள்விக்குரியதே!

ஆனால், தற்கால ஈழத்துச் சூழலில் இருமொழி பேசும் சமூகங்களிடையே காணப்படும் இடைவெளியைக் குறைக்கும் நோக்கிலும் சிங்கள மக்களது வாழ்வியல் பண்பாட்டை தமிழில் அறிமுகப்படுத்தும் நோக்கிலும் திக்வெல்லை கமாலின் மொழிபெயர்ப்புக்கான தேர்வுகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நேர்மொழிபெயர்ப்பு(Literal Translation):**

மொழிபெயர்ப்பில் ஈடுபடுபவருக்கு இருமொழிப் பரிச்சயம் மட்டுமே போதுமானதல்ல. கூடவே குறிப்பிட்ட துறை சார்ந்த விடய அறிவும் மொழி அறிவும் மொழிபெயர்ப்புத் திறனும் கட்டாயம் அவசியமாகும். இலக்குமொழி குறித்த ஆழ்ந்த புலமையும் ஆளுமையும் விடயம் தொடர்பான அறிவும் இல்லாமல் இருக்கும் நிலையில் மொழிபெயர்ப்பானது சொல்லுக்குச் சொல்லானதாகவும் இயந்திரத்தன்மை கொண்டதாகவும் அமைந்துவிடும்.

சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பாக வெளிவந்துள்ள பெரும்பாலான இலக்கியப் படைப்புக்கள் நேர்மொழிபெயர்ப்பாக உள்ளதைப் பெரும்பாலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மொழிபெயர்ப்பாளர் இலக்குமொழி வாக்கிய அமைப்பு, வாக்கிய நடை சார்ந்த விடயங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட, மூலமொழி வாக்கியவியல் அம்சங்களுக்கும் இலக்கணக் கூறுகளுக்கும் விசுவாசமாக நடக்க முயற்சிப்பதே இதற்குக் காரணமாகும். இவ்வாறு மொழிபெயர்க்கப்படும் படைப்புக்களில் வரும் உரைநடை, தமிழ் உரைநடைக்கு அந்நியமானதாகத் தோன்றுகின்றது. இதனால் தமிழ் வாசகர் மத்தியிலே மொழிபெயர்ப்புப் படைப்பானது புரிதலிற் சிக்கல்களை ஏற்படுத்துவதுடன் உணர்வுரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தவும் தவறிவிடுகின்றன. இக்குறை கமாலின் மொழிபெயர்ப்புக்களிலும் பரவலாகக் காணப்படுகிறது.

"**කරත්තය පැදවීමේ කොතලාවලගේ වාරය අවසන් අදියර ළඟා වෙමින් පැවතිණ. ඔහු පහළ වංගුවට කරත්තය ඇදී යද්දී කරත්තය ආපසු හැරවෙන ආකාරයට ලණු පොට ඇද ගෙන සිටියේය. කරත්තය පැමිණි වේගය නිසාම ආපසු හැර වූ විගස නැවතත් කන්ද දෙසට මඳ දුරක් ගමන් කර නතර විය. එය කොලු රංචුවට අපූරු ආස්වාදයක් ලබා දෙන ක්‍රීඩාවකි.**" (**පිනිවන්තලාව**, **පි**.15)

மேற்குறிப்பிட்டுள்ள மூல உரைப்பகுதி கமாலினால் பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

“கரத்தையைச் செலுத்தும் கொத்தலாவலையின் சந்தர்ப்பம் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கீழ் வளைவில் கரத்தை இழுபட்டுச் செல்கையில், கரத்தையை மீண்டும் திருப்பும் விதமாகக் கயிற்றுப் பட்டையை இழுத்துக் கொண்டிருந்தான் அவன். கரத்தை வந்த வேகம் காரணமாக, மீண்டும் திருப்பியபோதும் மேட்டுப் பக்கம் சென்றே நின்றது. இள வட்டத்தினருக்கு அற்புதமான இன்ப அனுபவத்தை வழங்கும் விளையாட்டு அது.” (விடைபெற்ற வசந்தம், ப. 15)

இப்பிரதியானதுசொல்லுக்குச் சொல் நேர்மொழிபெயர்ப்பாகவே அமைந்துள்ளது என்பதைத் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. இதில் தமிழ்மொழி அமைப்பு, வசனநடை ஆகியவற்றைவிட சிங்கள மொழியமைப்பு, நடையியல்அம்சங்களே முக்கியம் பெற்றுள்ளன. இவ்வுரைப் பகுதியை சாதாரண வாசகர்கள் புரிந்து கொள்வதில் சிக்கல்கள் உள்ளன.

“கொத்தலாவலைக்குவண்டியைச்செலுத்த வழங்கப்பட்டிருந்த நேரம் முடிவடையும் தருவாயை நெருங்கிக் கொண்டிருந்தது. அவன், கீழ் வளைவை நோக்கி இழுபட்டுச் செல்லும் வண்டி மீண்டும் திரும்பும் விதமாக கயிற்றுப் பட்டையை பிடித்துக் கொண்டிருந்தான். வண்டியைத் திருப்பும்போது, பள்ளத்தை நோக்கி வந்த வேகம் காரணமாக அது மேட்டுப் பக்கமாக அரைவாசித் தூரம் சென்ற பின்பே நின்றது. அவ்விளையாட்டு இளவட்டத்தினருக்கு அற்புதமான இன்ப அனுபவத்தைக் கொடுத்தது.” என அம்மூலவுரைப் பகுதியைத் தமிழ் மொழியமைப்புக்கு மிகக்கிட்டியவாறு மொழிபெயர்க்கலாம்.

கமாலின் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பைக் காட்டும் இன்னுமொரு எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**“මේ පූජාවෙන් තම අපේක්‍ෂා ඉටුවන බවට වූ විශ්වාසය පෙරදැරිව වේද යාතිකා කීපයක් තොල් මතුරමින් මහලු දේව නියෝජිතයා කුකුළාගේ ගෙල සිඳ දැමුවේය. අනතුරුව කෝවිල මිදුලේ පොල් ගසන කළුගල මතට කුකුළු කඳ දැමුවේය. තටු ගසමින් දෙපසටත් ඉගළටත් පියාඹන්නට තැත් දරමින් දැගලූ හිස නැති කුකුළු කදේ ගෙලෙන් ගලා ගිය රුධිරය අවට විසිරී ගියේය. ස්වල්ප වේලාවක් දඟලා ගල මත ඇද වැටුණු කුකුළු කඳ ගැහෙමින් පැවතී නිශ්චල විය.”**

(‘**පිනිවන්තලාව**’, **පි**.111)

மேற்குறிப்பிட்டுள்ளமூலஉரைப்பகுதிகமாலினால்பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

“இந்தப் பூசையின் மூலம் தமது எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற நம்பிக்கையை வலுவூட்டும் விதமாக வேதகரிகள் பல உச்சாடனம் செய்த வயதான சமயப் பிரதிநிதி சேவலின் கழுத்தை வெட்டினார். பின்னர் கோயில் முற்றத்தில் தேங்காய் கல் மீது சேவலின் உடலைப் போட்டார். சிறகடித்தது இரு பக்கமாகவும் மேலும் கீழும் துடிதுடித்த தலையில்லாச் சேவலின் கழுத்திலிருந்து வழிந்த குருதி சூழவரச் சிதறியது. சிறிது நேரம் துடித்து கல் மீது விழுந்த அது அமைதியடைந்தது.” (விடைபெற்ற வசந்தம், ப. 109)

இவ்வுரைப் பகுதி, மூலமொழி வாக்கிய அமைப்பைப் பின்பற்றியுள்ளதனால் தமிழ்ப் புனைகதை நடைக்கு அந்நியமான ஒரு நடையில் அமைந்துள்ளது. சொற்களின் ஒழுங்கமைப்பு மாறியுள்ளதனால் தெளிவற்ற வாக்கிய அமைப்பையே இதில் காணக்கூடியதாக உள்ளது. ‘தேங்காய் கல்’ என்பது பொருள் மயக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனைப் பின்வருமாறு மீள மொழிபெயர்க்கலாம்.

“பலி கொடுக்கும் வயதான பூசகர், இப்பூசை மூலம் தமது எதிர்பார்ப்பு நிறைவேறும் என்று நம்பினார். அதனால், மந்திரங்களை உச்சரித்தபடி சேவலின் கழுத்தை வெட்டினார். பின்னர், கழுத்து வெட்டப்பட்ட அச்சேவலைக் கோயில் முற்றத்தில் இருந்த தேங்காய் உடைக்கும் கருங்கல்லின் மீது போட்டார். அது உருண்டு பிரண்டு மேலே சிறகடித்துப் பறக்கத் துடித்தது. அதனால் தலையில்லா அச்சேவலின் கழுத்திலிருந்து வழிந்த இரத்தம், எல்லாப் பக்கங்களிலும் தெறித்தது. சிறிது நேரம் துடித்தபடி இருந்த அச்சேவல் கல் மீது விழுந்து அமைதியடைந்தது.”

**சிங்கள மொழி அமைப்பும் நடையும்:**

சிங்களத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான படைப்புக்களில் கணிசமான அளவு சிங்கள மொழி வாக்கிய அமைப்பும் வசன நடையும் அவ்வாறே பின்பற்றப்பட்டுள்ளன. அவை தமிழ் மொழியின் இலக்கண மரபுகளுக்கேற்ப வளர்ச்சியடைந்துள்ள தமிழ்ப் புனைகதை உரைநடைக்குஏற்பமொழிபெயர்க்கப்படவில்லை. எடுத்துக்காட்டு:

**"සුන්දරාගේ මෘත ශරීරය පොල් අතු පැලේ වැල් ඇඳ උඩ වැතිරී තිබේ. සිට්ට්ට උගුර ලේ රහ දැනේ. කෑ ගැසීමටත් බැරි තරමට සිට්ටි හෙම්බත් වූයේ හඬා වැටීම නිසාය"** ('**බවසරණ**', **පි**.114)

**இதன் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் பிரதி பின்வருமாறு.**

"சுந்தராவின் உயிரற்ற உடல் ஓலைக் குடிசையில் கட்டிலின் மேல் வைக்கப்பட்டிருந்தது. சித்தியின் தொண்டையில் இரத்தச் சுவை தட்டியது. சத்தமிடக் கூட முடியாதளவுக்குச் சித்தி களைப்படைந்து போயிருந்தாள், ஏலவே அழுது ஓலமிட்டதனால்." ('தொடரும் உறவுகள்', ப. 107)

மூலமொழியின் வாக்கிய அமைப்பை மீறாத வகையில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை ".....**சித்தி** களைப்படைந்து போயிருந்தாள், ஏலவே அழுது ஓலமிட்ட**தனால்**" ஆகிய சொற்றொடர்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றைத் தமிழ்மொழி அமைப்பினுக்கேற்ப கீழ்வருமாறு மீள் மொழிபெயர்க்கலாம்.

"சுந்தராவின் பிணம் ஓலைக் குடிசையில் ஒரு கயிற்றுக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தது. சித்தி தொடர்ந்தும் கதறி அழுததனால் களைப்படைந்திருந்தாள். அவளது தொண்டையில் இரத்தச் சுவை தட்டியது"

**சிங்கள மொழிப் பண்பாட்டைப் பெயர்த்தல்:**

பேசும் மக்களின் பண்பாட்டால் உருவாகி அதனால் வளர்ந்து வருவது மொழி; எனவே ஒவ்வொரு மொழியும் தனித்தன்மை வாய்ந்தது. அத்துடன் பண்பாடும் மொழிக்கு மொழி வேறுபடும். மூலமொழியிலிருந்து, இலக்குமொழிக்குப் படைப்பொன்றை மொழிபெயர்க்கும்போது இலக்குமொழிப் பண்பாட்டுக்கு ஏற்றவிதமாக மொழிபெயர்க்க வேண்டும். இரு வேறுபட்ட மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளுக்கிடையில் பண்பாட்டு வேறுபாடுகள் அதிகம் காணப்படும். சிங்களத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்படும்போது சில சந்தர்ப்பங்களில் பண்பாட்டுவேறுபாடுகள்கவனிக்கப்படாமல்மொழிபெயர்க்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"**සිංහයා කොපමණ බඩගිනි වුනත් තණ කොළ බුදින්නෙ නෑ කියනවනෙ**...."('**ගුරු පඬුරු**', **පි**.82)

என்ற சிங்களப் பழமொழியானது,"சிங்கம்எவ்வளவுபசித்தாலும்புல்சாப்பிடாதென்று சொல்வார்களே....." ('குருதட்சணை', ப. 83) எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'சிங்கம் பசித்தாலும் புல் தின்னாது' என்று கூறும் மரபு தமிழில் இல்லை. இதனை "புலி பசித்தாலும் புல் தின்னாது என்று சொல்வார்களே" எனத் தமிழ்மொழி மரபுக்கேற்ப மொழிபெயர்த்தல் நன்று.

"மாமீ,**மாமிக்கு** சுகமில்லையா?"
"மாமி,**மாமிட** பிள்ளைங்க எங்க?"
"இனி மாமி,**மாமிக்கு** யாருமே இல்லையா?" ('வெற்றியின் பங்காளிகள்', ப. 45)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களில் முன்னிலைப் பெயர்களுக்குப் பதிலாக உறவு முறைப் பெயரே மீண்டும் சுட்டப்பட்டு உள்ளது. அதனால் இங்கு குறிக்கப்படும் மாமி என்ற பாத்திரம் ('மாமிக்கு','மாமிட','மாமிக்கு') முன்னிலைக்கு உரியதா? படர்க்கைக்கு உரியதா? என்ற சந்தேகம் ஏற்படும். ஏனெனில் தமிழ்மொழி மரபில் இவை படர்க்கைப் பெயர்களாகும். மூலமொழியில் இவை முன்னிலைப் பெயரை உணர்த்தவே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இவ்வாக்கியங்களைக் கீழ்வருமாறு மீள் மொழிபெயர்க்கலாம்.

“மாமீ,**உங்களுக்குச்** சுகமில்லையா?”
“மாமி,**உங்கட** பிள்ளைகள் எங்கே?”
“இனி மாமி,**உங்களுக்கு** யாருமே இல்லையா?”

முன்னிலையில் இருப்போரை விளித்துப் பேசுவதற்கு உறவுமுறைப் பெயரை அல்லது இயற்பெயரை அல்லது இயற்பெயரோடு உறவுமுறைப் பெயரை இணைத்து அல்லது ஒரு பொதுப்பெயரைப் பயன்படுத்துகின்றனர். சில வேளைகளில் சில உறவுமுறைப் பெயர்கள் பொதுப்பெயராக மாறுவதும் உண்டு. இது சிங்கள மொழிப் பண்பாட்டிற்கே உரிய சிறப்பம்சங்களில் ஒன்றாகும். பெரும்பாலும் அப்பண்பாடு தமிழிலும் உள்ளபடியே மொழிபெயர்க்கப்படுகிறது.

“**කොහොමද අපේ ඉසිඳු පුතාටයි රුවිනි දුවටයි කිරියි බතුයි රසද**?”
(‘**මුලතිව් සීයා**’, **පි**.61)

இக்கூற்றானது பின்வருமாறு தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

“எப்படி எங்கள் இஸிது மகனுக்கும் ருவினி மகளுக்கும் தயிரும் சோறும் சுவை தானா?”
(‘முல்லைத்தீவு தாத்தா’, ப. 73)

இங்கு ஆட்பெயருடன் உறவுப்பெயரும் சேர்ந்து விளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தமிழ் மரபுக்கேற்ப “நம்ம இஸிதுவுக்கும் ருவினிக்கும் தயிரும் சோறும் எப்படி? சுவையாக இருக்கின்றதா?” என மொழிபெயர்க்கலாம்.

முன்னிலைப் பெயராக உறவுப்பெயரை அல்லது இயற்பெயரை, அல்லது இயற்பெயரோடு உறவுமுறைப் பெயரை இணைத்து அல்லது பொதுப் பெயரை வழங்குவது சிங்கள மொழிப் பண்பாடாகும். அப்பண்பாடு அப்படியே தமிழிலும் பின்பற்றப்பட்டுள்ளதை திக்வெல்லை கமாலின் மொழிபெயர்ப்புக்களினூடாகக் காணலாம்.

**ஆட்பெயர் + உறவுப்பெயர்**

- ஜோதிபால அண்ணா, லூசி மாமி, குஸுமா அக்கா (‘திறந்த கதவு’, 2009)
- லயனல் அய்யா,கமகே ஐயா,நெல்சன் அண்ணா (‘குருதட்சணை’, 2008)
- யசவதி மாமி, அப்பு மாமா (‘வெற்றியின் பங்காளிகள்’, 2009)
- சுமனா அக்கா, ஆரியசேன அண்ணா, ராசையா மாமா, நோனஹாமி மாமி (‘விடைபெற்ற வசந்தம்’, 2010)

**ஆட்பெயர் + பொதுப்பெயர்**

- சிரிசேன முதலாளி (‘திறந்த கதவு’, 2009)
- சிரிநாத சேர், ஹெமில்டன் முதலாளி, பெரேரா முதலாளி (‘குருதட்சணை’, 2008)
- சிரிசேன முதலாளி, விஜேசிங்க பாஸ் (‘விடைபெற்ற வசந்தம்’, 2010)
- ஹரமானிஸ் முதலாளி (‘தொடரும் உறவுகள்’, 2009)

**இயற்பெயர் + உறவுப்பெயர்**

- முல்லைத்தீவு தாத்தா (‘முல்லைத்தீவு தாத்தா’, 2011)
- உடபீல்லகொட அண்ணா (‘குருதட்சணை’, 2008)

**பொதுப்பெயர்**

- சிவப்பு முதலாளி, கறுப்பு முதலாளி (‘வெற்றியின் பங்காளிகள்’, 2009)

**தேவையற்ற சொற்பயன்பாடு:**

திக்வெல்லைக் கமால், ஆக்க இலக்கியப் படைப்புக்களைச் சிங்களத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும்போது, நேர்மொழிபெயர்ப்புக் காரணமாகச் சில பொருளற்ற, தேவையில்லாத, மேலதிகச் சொற்களை இலக்குமொழியில் கையாண்டுள்ளார். சிட்னி மாகஸ் டயஸின் ‘அம்மா எனதுரு’(**අම්මා එනතුරු**) எனும் சிறுவர் இலக்கியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பான,‘அம்மா வரும்வரை’ (2011), எனும் படைப்பிலிருந்து இதற்குச் சில எடுத்துக் காட்டுக்களைத் தரலாம்.

"**නෑ නෑ ආච්චි අම්මා නිදි. එයා දැන්ම නැගිටින්නේ නෑ**" (மூ. மொ., ப. 4)
"**නංගි හෙමින් හෙමින් අඩිය තිය තිය ගෙට රිංගුවා**" (மூ. மொ., ப. 10)
"**සිරියාවති ආච්චි බයෙන් බයෙන් ගිහින් දොර ඇරියා**" (மூ. மொ., ப. 16)

**இவ்வாக்கியங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.**

"**இல்லை இல்லை** ஆச்சி தூக்கம். இப்போதைக்கு எழும்பமாட்டா" (இ. மொ., ப. 4)
"சகுனி **மெல்ல மெல்ல** அடிமேல் அடிவைத்து வீட்டினுள்ளே புகுந்தாள்" (இ.மொ., ப.11)
"சிரியாவதி ஆச்சி **பயந்து பயந்து** போய் கதவைத் திறந்தாள்" (இ. மொ., ப. 11)

மேலே மேற்கோள் காட்டப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பு வாக்கியங்களில் வரும் இல்லை இல்லை, மெல்ல மெல்ல, பயந்து பயந்து ஆகிய சொற்றொடர்கள் வாக்கியத்தில் ஒரே கருத்தைத் தெரிவிக்கவே மீண்டும் மீண்டும் வந்துள்ளன. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்க முயற்சித்தமையின் விளைவே இதுவாகும். ஒரு சொல் தொடர்ந்து அடுக்கி வருதலால் வாக்கியத்தின் கருத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. தமிழ்மொழி மரபிற்கும் அத்தகைய வாக்கியங்கள் முரணானவை.

**இக்கூற்றுக்களைக் கீழ்வருமாறு மொழிபெயர்க்கலாம்.**

- இல்லை, பாட்டி நித்திரை, அவர் இப்பொழுது எழும்பமாட்டார்.
- சகுனி மெதுவாக அடி வைத்து வீட்டினுள் நுழைந்தாள்.
- சிரியாவதி பாட்டி பயத்துடன் கதவைத் திறந்தார்.

**மொழிக்கூறு சார்ந்த சிக்கல்கள்:**

தேவையற்றஇடங்களில் வேற்றுமை உருபுகளின் பயன்பாடு, பின்னொட்டுக்களின் பயன்பாடு முதலியன திக்வெல்லைக் கமாலின் மொழிபெயர்ப்புக்களில் மொழிக்கூறுகள் சார்ந்த சிக்கல்களாகக் காணப்படுகின்றன.

சிட்னி மாகஸ் டயஸின் 'பவசரண' எனும் சிறுகதைத் தொகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பான,'தொடரும் உறவுகள்' (2009), மற்றும் 'அம்மா எனதுரு' எனும் சிறுவர் இலக்கியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பான 'அம்மா வரும் வரை' (2011), தெனகம சிரிவர்தனவின் 'குருபண்டுறு' எனும் நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பான 'குருதட்சணை' (2008), உபாலி லீலாரத்னாவின் 'பினிவன்தலாவ' எனும் நாவலின் தமிழாக்கமான 'விடைபெற்ற வசந்தம்' (2010) ஆகிய திக்வெல்லை கமாலின் மொழிபெயர்ப்புப் படைப்புக்களில் அடையாளம் காணப்பட்ட சில மொழிக்கூறு சார்ந்த சிக்கல்கள் இங்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

"**හරි අපි කැමතියි අද ඉඳලම... නැහැ. දැං ඉඳලම තේ කැලේ හැම තැනම ඇවිදලා බලනවා**"('**පිනිවන්තලාව**', **පි**.57)

"சரி, நாங்க... விருப்பம். இன்னேலிருந்து... இல்ல, இப்போதே தேயில காடு முழுவதும் சுற்றிப் பாப்பம்."('விடைபெற்ற வசந்தம்', ப. 58)

**நாங்க விருப்பம்**..... என்ற சொற்றொடரானது தமிழ் இலக்கண மரபிற்கு முரணானது. கேட்போன் முன்னிலையில் இருப்போனுக்கு அதாவது பேசுவோனுக்குப் பதிலளிக்கும்போது நாங்கள் எனும் சொல் படர்க்கையில் **எங்கள்** என்றே மாற்றம் பெற வேண்டும். அத்துடன் புணர்ச்சி விதிகளுக்கு ஏற்ப பொருத்தமான வேற்றுமை உருபையும் ஏற்க வேண்டும். "சரி, எங்களுக்கு விருப்பம். இன்றிலிருந்து... இல்லை, இப்போதே தேயிலைக்காடுமுழுவதும் தேடிப் பார்ப்போம்." என அது மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம்.

"**අපරාදේ කැටපෝලෙ දාලා ආවා**"('**පිනිවන්තලාව**', **පි**.138)
"அநியாயம் கெடபோல் விட்டிட்டு வந்திட்டன்" ('விடைபெற்ற வசந்தம்', ப. 140)

வாக்கிய இயைபிலும், தொடர் ஒழுங்கமைப்பிலும் கருத்தைத் தெளிவாக விளக்குவதற்கு வேற்றுமை உருபுகள் உரிய இடத்தில் வர வேண்டியது அவசியம். பொதுவாகத் தமிழ் மொழி மரபில் செயற்படு பொருள் வேற்றுமை உருபை ஏற்று வருவது

இயல்பு. இங்கு **கெடபோல்** எனும் சொல் அவ்வாறு ஏற்று வரவில்லை. இது ‘‘அநியாயம், கவணை எடுக்காமல் வந்துவிட்டேன்’’ என மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம்.

‘‘**තාත්තා කිව්ව උඹට අද එන්න එපා ය කියල**’’ (‘**ගුරු පඬුරු**’, **පි**.31)
‘‘உனக்கு இன்று வரவேண்டாம் என்று அப்பா சொன்னார்.’’ (‘குருதட்சனை’, ப. 32)

இக்கூற்றானது தமிழ்ப்புணர்ச்சி விதிகளுக்கு அமைவாக இல்லை. இங்கு இரண்டாம் வேற்றுமை **ஐ** உருபை ஏற்று வரவேண்டிய முன்னிலை ஒருமையான **நீ** நான்காம் வேற்றுமை உருபான **கு** வை ஏற்று வந்துள்ளது. இங்கு **உனக்கு** என்பது **உன்னை** என்று மாற்றம் பெற்றாலே வாக்கியம் இயைபு பெறும். இதனை ‘‘உன்னை இன்று வரவேண்டாம் என்று அப்பா சொன்னார்.’’ என மொழிபெயர்க்கலாம்.

**நிகரன் தேர்வு:**

மூலமொழிச் சொல்லுக்கும் பொருளுக்கும் இணையான இலக்கு மொழிச் சொல்லையும் பொருளையும் கண்டறிதலே நிகரன். மொழிபெயர்ப்பில் நிகரன்களின் பயன்பாடு மிக முக்கியமானது. ஏனெனில் மூலத்துக்கு இணையான பெறுமொழி நிகரனைக் கண்டறியும் செயற்பாடே மொழிபெயர்ப்பு’’ என்கின்றார் ஐசடோர் பிஞ்சக். ஒரு மொழிபெயர்ப்பாளனின் பண்பாட்டுப் பின்புலம், அறிவுத்திறன், பரந்துபட்ட பொது அறிவு, முக்கியமாக இலக்கு மொழியில் உள்ள ஆளுமை ஆகியன நிகரன்களைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. திக்வெல்லைக் கமாலின் மொழிபெயர்ப்புக்களை நுணுக்கமாக அவதானிக்கின்றபோது நிகரன் தொடர்பில் பல்வேறு சிக்கல்களை காணக்கூடியதாக உள்ளது. ஒரு மூலமொழிச் சொல்லுக்கு பலவிதச் சொற்களை நிகரன்களாகப் பயன்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பயன்பாடு இலக்குமொழி வாசகர்களை தடுமாறச் செய்துவிடும் என்பது கவனத்திற்குரியது.

நிகரன்கள் முறைசார்ந்த நிகரன்கள், ஆற்றல்சார்ந்த நிகரன்கள் என இருவகைப்படுகின்றன. இலக்கிய மொழிபெயர்ப்புக்களைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் முறைசார்ந்த நிகரன்களைப் பயன்படுத்த முடியாது. மூலமொழியில் உள்ள ஒரு சொல்லுக்கு இலக்கு மொழியில் பல நிகரன்கள் இருக்கலாம். அல்லது, மூலமொழியில் நுண்ணிய வேறுபாடுகளுடன் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் இருக்கும்போது, இலக்கு மொழியில் அதற்கு ஒரு சொல் மட்டுமே இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் மூலமொழிச்சொல் உணர்த்தும் பொருளையும் அது பயன்படுத்தப்பட்டுள்ள சூழலையும் கருத்தில் கொண்டு ஆற்றல் சார்ந்த நிகரனையே தெரிவு செய்ய வேண்டும். இரு வேறுபட்ட மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் மொழிபெயர்ப்புச் செயற்பாட்டில் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. இதற்கு சிங்களமொழியில் வழங்கும் முன்னிலைப் பெயர்ப் பயன்பாடு தக்க உதாரணமாகும். ஏனெனில் தமிழ் சிங்கள மொழிகளுக்கிடையே சில ஒற்றுமைகள் காணப்பட்டபோதும் சில பண்பாட்டு ரீதியான இலக்கணக் கூறுகளில் சில நுண்ணிய வேறுபாடுகளும் உள்ளன. அவற்றையும் கருத்திற் கொண்டு மொழிபெயர்த்தல் அவசியமாகும். எனவே ஒரு மொழிபெயர்ப்பாளனுக்கு நிகரன் தொடர்பிலான ஆகக் கூடிய அறிவின் அவசியமும் உணரப்படுகிறது. திக்வெல்லைக் கமாலும் இதனை உணர்ந்து செயற்படவேண்டும்.

**முடிவுரை:**

திக்வெல்லை கமால் பயிற்றப்பட்ட விஞ்ஞானஆசிரியராக அரச சேவையில் இணைந்து கொண்டவர். இயற்கையின் வாய்ப்பால் ஒரு படைப்பாளியானவர். தாய்வழி தமிழும் ஊர்வழி சிங்களமும் வாய்த்தவர். ஆர்வத்தினாலும் ஈடுபாட்டினாலும் மொழிபெயர்ப்புத் துறையில் கால் பதித்தவர். திக்வெல்லைக் கமால் ஈழத்துத் தமிழ் மொழிபெயர்ப்பாளர் வரிசையில் ஒரு முன்னணி மொழிபெயர்ப்பாளர் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், அவரது மொழிபெயர்ப்புப் பிரதிகளை ஆழமாகவும் நுணுக்கமாகவும் அவதானிக்கின்றபோது தவிர்த்திருக்கக்கூடிய பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆகையால், அவர் ஒரு மொழிபெயர்ப்பாளனுக்கு இருக்கவேண்டிய அடிப்படை அம்சங்களை முழுமையாகவும் செழுமையாகவும் புரிந்து கொண்டு தனது மொழிபெயர்ப்புப் பணியைத் தொடர்வது சிறந்தது.

ஒரு மொழிபெயர்ப்பாளன் சிறந்த மொழிபெயர்ப்புப் பிரதியொன்றைத் தருவதற்கு மொழிபெயர்ப்புத் தொடர்பிலான கற்கைநெறியொன்றைத் தொடர்ந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால் ஒரு மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்புக் கொள்கை, மொழிபெயர்ப்பு முறைகள், மொழிபெயர்ப்பு உத்திகள் தொடர்பிலான அறிவையும் தெளிவையும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். இவ்வம்சத்தில் திக்வெல்லைக்

கமால் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அப்போதுதான், அவரால் மிகச் சிறந்த மொழிபெயர்ப்புப் பிரதிகளை நமக்குத் தரமுடிவதோடு, சிங்கள இலக்கியங்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்திடும் ஈழத்து மொழிபெயர்ப்பாளர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தவும் முடியும்.

ஈழத்தில் தேசிய மொழிபெயர்ப்பு மையமொன்றின் அவசியம் உணரப்பட்டுள்ளது. அம்மையத்தினூடாக துறைசார் வல்லுநர்களின் அறிவையும் அனுபவங்களையும் ஆற்றலையும் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படலாம் என நம்பப்படுகிறது. அவ்வாறான ஒரு சூழல் வாய்க்காவிடினும் திக்வெல்லைக் கமால் போன்ற மொழிபெயர்ப்பாளர்களுக்கு அதில் செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்புள்ளது. எனவே, திக்வெல்லைக் கமால் தமது மொழிபெயர்ப்புத் துறைசார்ந்த பணியில் துறைசார் வல்லுநர்களின் அபிப்பிராயங்களையும் உள்வாங்கிக் கொள்வது சிறந்தது.

உசாத்துணை:


1. Avadhesh K. Singh, (Ed.), (1996), **Translation: It’s Theory and Practice**, New Delhi: Creative Books.

2. Bassnet, Susan,(1980), **Translation Studies**, New York: Methuen.

3. Catford, J.C., (1965), **A Linguistic Theory of Translation**, London: Oxford University Press.

4. Valarmathy, M., (Ed.), (1999), **On Translation**, Chennai: International Institute of Tamil Studies.

5. Valarmathy, M., Et all (Ed.), (2001), **Translation: Theory and Application**, Chennai: International Institute of Tamil Studies.

6. சிவசண்முகம், சி., தயாளன், வே., (1989),**மொழிபெயர்ப்பியல்**, சிவகங்கை: அன்னம்.

7. சேதுமணி மணியன், (1990),**மொழிபெயர்ப்பியல்**: கோட்பாடுகளும் உத்திகளும் மதுரை: செண்பகம் வெளியீடு.

8. திக்வெல்லை கமாலின் மொழிபெயர்ப்புக்கள் - யாவும்

9. முருகையன், இ., (2002),**மொழிபெயர்ப்பு நுட்பம் -ஓர்அறிமுகம்**, கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.